1024 Mr. Sivakumar

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2017
**Year End Evaluation**

| ශ්‍රේණිය / தரம் / Grade | විෂයය / பாடம் / Subject | පත්‍රය / வினாத்தாள் / Paper | කාලය / காலம் / Time |
|---|---|---|---|
| 06 | கணிதம் | I,II | 02 மணித்தியாலம் |

பெயர் :- ...................................................... சுட்டெண் :- ..........................

## பகுதி I


எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.

(01) தரப்பட்ட எண்ணைச் சொற்களில் எழுதுக.
2 001 540

(02) சுருக்கி எழுதுக. 652 x 36

(03) பின்வரும் எண்களை இறங்குவரிசையில் எழுதுக.
-3 . 5 , 0 . -1 , 3

(04) தரப்பட்டுள்ள உருவில் a, b என்னும் எழுத்துக்களினால் குறிப்பிடப்பட்ட கோணங்களின் வகைகளை எழுதுக.




a =

b = ...........

(05) உருவில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப

| | | | | |
|---|---|---|---|---|
| A | | D | | G |
| | | | | |
| B | | E | | H |
| | | | | |
| C | | F | | I |


(i) Fஇற்கு எத்திசையில் B அமைந்துள்ளது. ....

(ii) Eயிற்கு கிடையாக அமைந்துள்ள எழுத்து ஒன்றை எழுதுக. ....... ..................................

(06) (a) $\frac{4}{6}$ என்பதற்கு சமவலுப் பின்னம் ஒன்றை எழுதுக.

(b) பெரிய பின்னத்தைத் தெரிந்து எழுதுக. $\frac{1}{7}$ , $\frac{1}{3}$ , $\frac{1}{4}$

(07) தரப்பட்ட பின்னங்களின் பொதுப் பண்பிற்கேற்ப இரு கூட்டங்களாக்கி அவற்றைக் கூடுகளில் எழுதுக. அவற்றிற்கு பொருத்தமான பெயர்களை புள்ளிக்கோடுகளில் எழுதுக.



(08) 1.7 + 0.3 என்பதைச் சுருக்கி எழுதுக.


(09) (i) 63 என்னும் எண்ணில் ஒன்றின் இடத்து இலக்கத்தையும் பத்தினிடத்து இலக்கத்தையும் இடமாற்றி எழுதுக. ..........................................

(ii) நீர் எழுதிய எண் எத்தனையாவது சதுர எண் ..........................

(10) 27 இன் அனைத்து காரணிகளையும் எழுதுக.

(11) ஆங்கில எழுத்துக்களால் காட்டப்படும் உருக்களின் பெயர்களை தொடர்புபடுத்துக.

| எழுத்து | பெயர் |
|---|---|
| A | முக்கோணி |
| B | சரிவகம் |
| C | சதுரம் |
| | செவ்வகம் |
| | இணைகரம் |





(12) பின்வருவனவற்றை அளக்கப் பயன்படும் அலகுகளை எழுதுக.

(i) ரூ. 10 நாணயத்தின் தடிப்பு - ..........................................

(ii) பஸ் வண்டி ஒன்றின் நீளம் - ..........................................


(13) பெரிய பாத்திரத்தில் $1.5l$ நீர் உள்ளது. அதிலிருந்து சிறிய பாத்திரத்திற்கு $230ml$ நீர் ஊற்றப்பட்டது பெரிய பாத்திரத்தில் எஞ்சியுள்ள நீரின் அளவு யாது?




(14) ஒழுங்கான திண்மம் ஒன்றின் வலையுரு படத்தில் காட்டப்பட்டுள்ளது

(i) இவ்வலையுருவால் ஆக்கப்படும் திண்மத்தின் பெயர் யாது?


(ii) அத்திண்மத்தின் விளிம்பொன்றின் நீளம் யாது?




(15) 8இன் மடங்கு ஒன்றை கிட்டிய 10 இற்கு மட்டம் தட்டியபோது 70 பெறப்பட்டது. அவ் எண் யாது?

(16) தரப்பட்ட நேரத்தை சர்வதேச நியம நேரத்தில் எழுதுக. பிற்பகல் 2 மணி 6 நிமிடங்கள் 25 செக்கன்கள்

(17) (i) வரவுக் குறியால் காட்டப்பட்டுள்ள எண் யாது? ........................



(ii) 8 என்னும் எண்ணை வரவுக் குறியில் எழுதுக. ........................

(18) 16 : 4 என்னும் விகிதத்தை எளிய வடிவில் எழுதுக.

(19) வெற்றுக் கூட்டிற்குள் பொருத்தமான குறியீட்டை இடுக. ">" "<" அல்லது "="

$2^3$ ☐ $3^2$

(20) சதுரம் ஒன்றின் பரப்பளவு $16cm^2$ ஆகும். இதற்குச் சமபரப்புள்ள செவ்வகம் ஒன்றின் அகலம் 2cm ஆகும். இச் செவ்வகத்தின் நீளம் யாது?

## பகுதி II

- முதலாம் வினாவிற்கும் மேலும் 4 வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு விடை எழுதுக.
- முதலாம் வினாவிற்கு 16 புள்ளிகளும், ஏனைய வினாக்களுக்கு 11 புள்ளிகளும் வழங்கப்படும்.

(01) (a) "திணிவு" என்னும் அலகில் நீர் வகுப்பறையில் கற்றவற்றை நினைவு கூர்க. திண்மம், திரவம், வாயு என்பவற்றிற்கு திணிவு உண்டு என ஒரு மாணவன் கூறுகின்றான்.

(i) இக்கூற்று உண்மையானதா?

(ii) பின்வருவனவற்றின் திணிவுகளுக்குப் பொருத்தமான அலகுகளை எழுதுக.

(அ) சாக்கு ஒன்றிலுள்ள அரிசி

(ஆ) 50 சிறிய ஊசிகள்

(iii) கீழுள்ள அட்டவணையை உமது விடைத்தாளில் பிரதி செய்து வெற்றிடங்களை நிரப்புக.

| உணவுப் பொருள் | 1 கிழமைக்குத் தேவையான அளவு | 1 kg இன் விலை (ரூபா) | 1 கிழமைக்குரிய செலவு (ரூபா) |
|---|---|---|---|
| அரிசி | 11kg | 82.00 | .......... |
| பால்மா | .................. | 420.00 | 105.00 |
| பருப்பு | 500g | .................. | 90.00 |
| சீனி | ................ | 100.00 | 175.00 |
| மொத்தம் | .................. | | ................ |

(iv) அட்டவணையின்படி ஒரு கிழமைக்குத் தேவையான பொருட்களின் மொத்த திணிவு யாது?

(v) ஒரு கிழமைக்குரிய மொத்தச் செலவு யாது?


(b) (i) பெறுமதி காண்க.

| $l$ | $ml$ | |
|---|---|---|
| 5 | 650 | |
| 3 | 725 | + |

(ii) போத்தல் ஒன்றில் $2l$ $500ml$ பானம் காணப்பட்டது, பிள்ளை ஒன்று இதிலிருந்து $150ml$ பானத்தை அருந்தியது. தற்போது எஞ்சியுள்ள பானத்தின் அளவு யாது?

943

(02) (a) (i) உருவில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப செவ்வகத்தின் சுற்றளவு யாது?




(ii) இச்செவ்வகத்தின் உள்ளே வரையக்கூடிய மிகப்பெரிய சதுரமொன்றின் பக்கத்தின் நீளம் யாது?

(iii) செவ்வகம் ABCD இன் பரப்பளவானது நீர் (ii) இல் வரைந்த சதுரத்தின் பரப்பளவைப் போல எத்தனை மடங்கு?

(b) வட்டமொன்றை வரைந்து பின்வருவனவற்றைக் குறிக்க

A- வட்டத்தில் உள்ள புள்ளி

B-வட்டத்திற்கு வெளியே உள்ள புள்ளி

C-வட்டதிற்கு உள்ளே உள்ள புள்ளி

(03) (a) (i) விரித்தெழுதிப் பெறுமானம் காண்க. $2^2 \times 3^2$

(ii) இடைவெளி நிரப்புக.

$64 = 2^{\square} = 4^{\square} = \square^2$

(b) (i) 45 மாணவர்கள் உள்ள வகுப்பொன்றில் குறித்த தினத்தில் p மாணவர்கள் வருகை தரவில்லை. அத்தினத்தில் வருகை தந்தோரின் எண்ணிக்கையை அட்சரகணித கோவையாக எழுதுக.

(ii) $p = 6$ ஆயின் அத்தினத்தில் வருகை தந்தோரின் எண்ணிக்கை யாது?

(04) பண்டார, முரளி, முஹமட் ஆகியோரின் உயரங்கள் முறையே 112cm, 1m 28cm, 1.02m ஆகும்

(i) மூவரின் உயரங்களையும் ஒரே அலகில் எழுதுக.

(ii) இவர்களில் உயரம் கூடியவர் யார்? காரணம் தருக.

(iii) சுருக்கி எழுதுக.

108m 96cm + 4m 84cm

(iv) கழித்து எழுதுக.

$$\begin{array}{r} 82.68 \\ 5.49 - \\ \hline\hline \end{array}$$

(v) பெரிய எண்ணைத் தெரிந்து எழுதுக.

2.091 , 1.928 , 0.999

(05) (a) பியால் A என்னும் புள்ளியிலிருந்து மேற்கு நோக்கி 30m தூரம் நடந்து அங்கிருந்து வடக்கு நோக்கி 10m தூரம் நடந்தான். பின்னர் அங்கிருந்து 30m கிழக்கு நோக்கி நடந்து B என்னும் புள்ளியை வந்தடைந்தான்.

(i) மேற்கூறிய தகவல்களைப் பருமட்டான படத்தில் குறிக்க.

(ii) B யில் இருந்து பார்க்கும் போது A எத்திசையில் உள்ளது?

(iii) A யிற்கும் B யிற்கும் இடைத்தூரம் யாது?

(b) (i) சதுரமுகிற்கு உதாரணம் ஒன்று எழுதுக.

(ii) சதுரமுகி ஒன்றின் வலையை வரைக.

(iii) சதுரமுகியில் உள்ள விளிம்புகள் எத்தனை? உச்சிகள் எத்தனை?

(06) (a) கொழும்பிலிருந்து மு. ப. 11.45 இற்குப் புறப்பட்ட புகையிரதம் ஒன்று காலியை பி.ப. 2.30 இற்கு சென்றடைந்தது. பஸ் வண்டி ஒன்று கொழும்பிலிருந்து அதிவேக கடுகதிப் பாதை ஊடாக காலியைச் சென்றடைய 2 மணித்தியாலங்களும் 55 நிமிடங்களும் எடுத்தது.

(i) கொழும்பில் இருந்து புகைவண்டி மூலம் பயணிக்கும் ஒருவருக்கு காலியைச் சென்றடைய எடுக்கும் நேரம் யாது?


(ii) கொழும்பிலிருந்து பஸ் வண்டி ஒன்று மு.ப. 11.45இற்கு புறப்பட்டால் காலியைச் சென்றடையும் நேரம் யாது?

(iii) புகைவண்டியிலா, பஸ்வண்டியிலா பயணம் செய்வதற்கு அதிக நேரம் எடுக்கும்?

(b) $\frac{1}{3} + \frac{1}{6} + \frac{1}{12}$ என்பதைச் சுருக்கி எழுதுக.

(07) (a) குறித்த பாடசாலையொன்றில் தரம் 6, 7, 8, 9 மாணவர்களால் விளையாட்டு விநோத நிகழ்ச்சி ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டது. ஒவ்வொரு வகுப்பு மாணவர்களுக்கும் கிடைத்த வருமானம் பின்வரும் படவரைபினால் காட்டப்பட்டுள்ளது.

○ - என்பது ரூபா.500 ஐ குறிக்கும்.




(i) எந்த வகுப்பிற்கு அதிக வருமானம் கிடைத்தது?

(ii) எந்த வகுப்பிற்கு குறைந்த வருமானம் கிடைத்தது.

(iii) இந்நிகழ்ச்சியின் மூலம் கிடைத்த மொத்த வருமானம் யாது?

(b) (i) 1 us டொலர் இன் பெறுமதி 142 இலங்கை ரூபாய்கள் ஆகும் 12 us டொலரின் பெறுமதி எத்தனை இலங்கை ரூபாய்க்கள்?

(ii) 1*l* எரிபொருளின் மூலம் மோட்டார் சைக்கிள் ஒன்று 40km தூரம் செல்லும். 120km தூரம் செல்வதற்கு தேவையான எரிபொருளின் அளவு எத்தனை லீற்றர்?

සියලුම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

HINDU COLLEGE
No....3.........
Date...........
Library
COLOMBO 4

# மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**ஆண்டிறுதி மதிப்பீடு 2013**

## தரம் - 6

## கணிதம் - Mathematics

பெயர்/சுட்டெண் ....................................  நேரம் : 2 மணித்தியாலம்

### பகுதி I

* எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

* ஒவ்வொரு வினாவுக்கும் 2 புள்ளிகள் வழங்கப்படும்.


1. சுருக்கி எழுதுக. $4775 + 17 + 233$

2. " ஒரு மில்லியன் இருநூற்று இருபத்து நான்காயிரத்து ஏழு " என்பதை இலக்கங்களில் எழுதுக.

3. கீறிட்ட இடத்தை நிரப்புக.

   107 cm = ............. m ................ cm

4. உருவிலுள்ள கடிகார முகத்தில் மு.ப 9:30 காட்டப்பட்டுள்ளது. முட்களுக்கிடையே காட்டப்பட்டுள்ள a, b என்னும் கோணங்களின் வகை யாது?





   a = ........................................ b = ....................................

5. >, < என்பதை வெற்றுக்கூடுகளில் இட்டு தொடர்பு படுத்துக.

   i. 0 ☐ 5    ii. -10 ☐ -9

6. படத்தில் காட்டப்பட்டுள்ளது மேசன் வேலை செய்யும் போது உபயோகிக்கும் உபகரணம் ஆகும்.




i. அதன் பெயர் யாது?

ii. எச் சந்தர்ப்பத்தில் இது பயன்படும்?

7. சுருக்கி எழுதுக. $\frac{1}{4} + \frac{1}{8}$

8. உருவிலுள்ள எண் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள எண் யாது?





9. கீழே தரப்பட்டுள்ள நேரங்களை 24 மணிக்கடிகார முறையில் எழுதுக.

i. மு. ப 8.30

ii. பி. ப 2.10

10. cm இல் அளவு குறிக்கப்பட்ட அளவு கோல் ஒன்றின் பகுதி படத்தில் காட்டப்பட்டுள்ளது. ரிபனின் நீளம் யாது?



11. ஆறு ஒன்றின் நீளமானது கிட்டிய 10 இற்கு மட்டந்தட்டும் போது 330km ஆகும். இது எடுக்கக் கூடிய குறைந்த கூடிய நீளங்களை முழு எண்ணில் தருக.

(i). குறைந்த நீளம் ....................................km (ii). கூடிய நீளம் ........................................km.

12. சுருக்கி எழுதுக.


$$\begin{array}{r} 3.275 \\ -\ 1.687 \\ \hline \\ \hline \end{array}$$

13. ( 6, 11, 23, 8, 9, 17, 4, 2 )

கூட்டிலுள்ள இலக்கங்களை சேர்த்தி எண்கள், முதன்மை எண்கள் என்றவாறு பிரித்து எழுதுக.

14. i. உருவில் நிழற்றப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாகத் தருக.

ii. $\frac{4}{11}$ இற்கு ஒரு சமவலுப் பின்னம் ஒன்று தருக.



15. அப்பியாசக் கொப்பி ஒன்றின் விலை ரூ 32 ஆகும். அவ்வாறான எட்டுக் கொப்பிகளின் விலையைக் காண்க.

16. தரப்பட்ட தரவுகளுக்கு ஏற்ப வெற்றிடங்களை நிரப்புக.

| வரவுக் குறி | எண் |
|---|---|
| 𝍸 𝍸 // | ............ |
| ........................ | 15 |


17. குவளை ஒன்றின் கொள்ளளவு $200\ ml$ ஆகும். $1\ l\ 200\ ml$ பானத்தை நிரப்புவதற்குத் தேவையான குவளைகளின் எண்ணிக்கை யாது?

18. வெற்றுக் கூடுகளில் பொருத்தமான எண்ணை இட்டு நிரப்புக.

$$56 = \square^{\square} \times 7$$

19. 1.02, 0.75, 1.2, 0.8 என்னும் எண்களை ஏறுவரிசைப்படுத்துக.

20. A, B பாத்திரங்களின் கொள்ளளவுகள் முறையே $7l, 4l$ ஆகும். C என்னும் பாத்திரத்தில் $10l$ நீரை A, B இன் உதவியுடன் ஊற்ற வேண்டிய முறையை எழுதுக.



සියලුම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

# மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**ஆண்டிறுதி மதிப்பீடு 2013**

## தரம் - 6

## கணிதம் - Mathematics

5619

### பகுதி II

* முதலாம வினாவிற்கும் வேறு நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

* முதலாம் வினாவின் விடைக்கு 16 புள்ளிகளும ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கு 11 புள்ளிகளும் வழங்கப்படும்.

1. a. உணவுப் பொருட்கள் கொள்வனவுக்கான செலவு அறிக்கை ஒன்றை ஆசிரியரின் வழிகாட்டலுடன் வகுப்பறையில் தயாரித்ததை நினைவு கூருக.

i. உமது வீட்டிற்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்யும் போது அறிக்கை ஒன்றை தயாரிப்பதனால் உள்ள அனுகூலங்கள் இரண்டு தருக.

ii. தனது வீட்டிற்கு இரண்டு வாரங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் தொடர்பான அறிக்கை ஒன்றை சுமதி பின்வருமாறு தயாரித்தாள். கீறிட்ட இடங்களை நிரப்புக.

மாணவர் பெயர் : S. சுமதி

| உணவு | 2 வாரங்களுக்குத் தேவையான அளவு | 1kg இன் விலை | 2 வாரங்களுக்குரிய மொத்தச் செலவு |
|---|---|---|---|
| அரிசி | 14kg | ரு 60.00 | ................. |
| தேயிலைத் தூள் | 250g | .............. | ரு 300.00 |
| சீனி | ........... | ரு 100.00 | ரு 250.00 |
| பருப்பு | 1kg 750g | ரு 120.00 | .............. |
| உருளைக்கிழங்கு | ............... | ரு 80.00 | ரு 240.00 |
| மொத்தச் செலவு | | | ரு .............. |


iii. மேலேயுள்ள தரவுகளின் படி சீனியின் அளவுக்கும் தேயிலைத் தூளின் அளவுக்கும் இடையேயான விகிதம் யாது? இதனை எளிய விகிதத்தில் எழுதுக.

iv. கமலனின் வீட்டிற்கு இரண்டு வாரங்களுககு 12kg 250g அரிசி தேவைப்பட்டது. இதனை விட எவ்வளவு அரிசி சுமதியின் வீட்டிற்குக் கூடுதலாகத் தேவைப்பட்டது.

b. i. சுருக்கி எழுதுக.

| | kg | g |
|---|---|---|
| | 2 | 275 |
| + | 3 | 825 |

ii. ஒரு அமெரிக்க டொலரின் பெறுமதி ரு 115 ஆகும். ரு 1150 இற்கு எத்தனை அமெரிக்க டொலர்கள் வாங்கலாம்?




2. i. படத்திலுள்ள சதுர வடிவ அடரின் சுற்றளவு யாது?

ii. இதன் பரப்பளவு யாது?


iii.. இதன் சுற்றளவுக்குச் சமனான செவ்வகம் ஒன்றை வரைந்து அளவுகளைக் குறிக்க.

iv. அச் செவ்வகத்தின் பரப்பளவு யாது?

v. சதுரத்தின் பரப்பளவு, செவ்வகத்தின் பரப்பளவு பற்றி யாது கூறுவீர்?

vi. மேலேயுள்ள சதுர வடிவ அடரைப் பயன்படுத்தி அதிகூடிய பரப்பளவு கொண்ட வட்டம் ஒன்று வெட்டப்பட்டது. அதன் ஆரை யாது?

3. பாடசாலை ஒன்றிலுள்ள மாணவர்களால் விரும்பப்படும் பழங்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்களை பின்வரும் பட வரைபு காட்டுகின்றது.




i. 400 மாணவர்கள் வாழைப்பழத்தை விரும்புகின்றார்கள்.
(உருவம்) இனால் குறிக்கப்படும் எண்ணிக்கை யாது?

ii. அன்னாசிப்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?


iii. 300 மாணவர்கள் திராட்சைப் பழத்தை விரும்புகின்றார்கள் எனில், அதனைப் படம் மூலம் காட்டுக.

iv. மாணவர்களால் அதிகமாக விரும்பப்படும் பழம் யாது?

v. மாம்பழத்தை விட அன்னாசிப்பழத்தை எத்தனை பேர் அதிகமாக விரும்புகின்றார்கள்.

vi. பாடசாலையிலுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

4. a. படத்தில் காட்டப்பட்ட திண்மத்தின் விளிம்புகள் சம நீளமானவை ஆகும்.



i. இத்திண்மத்தின் பெயர் யாது?

ii. முகம் ஒன்றின் வடிவம் யாது?

iii. இத் திண்மத்தை அமைப்பதற்குத் தேவையான வலையுருவை வரைக.

iv. இதன் விளிம்புகள், உச்சிகள், முகங்கள் எத்தனை?

b. i. சுமதியிடம் ரூ50 உண்டு. அவள் ரூ $x$ இற்கு ஒரு புத்தகத்தை வாங்கினால், மிகுதிப் பணத்தை கோவையாகத் தருக.

ii. $x = 30$ எனில், மிகுதிப் பணம் எவ்வளவு?

5. a. i. { 10 இலும் குறைந்த இரட்டை எண்கள் } என்னும் தொடையை மூலகங்களில் எழுதுக.

ii. { 1, 3, 6, 10 } என்றவாறு மூலகங்களில் தரப்பட்ட தொடையை விபரித்து சொற்களில் எழுதுக.

b. i. 72 ஐ முதன்மைக் காரணிகளின் பெருக்கமாக எழுதுக.

ii. அதனை வலுக்களில் எழுதுக.


iii. $3^2 \times 4^2$ இன் பெறுமதி யாது?

6. a. நிமலன் தனது வீட்டிலிருந்து 10m வடக்கே சென்று பின் 20m கிழக்கே சென்று அங்கிருந்து திரும்பி 10m தெற்கே சென்று தனது பிரயாணத்தை நிறைவு செய்கின்றான்.


i. இத் தகவல்களைக் காட்டும் பருமட்டான படம் ஒன்று வரைக.

ii. நிமலன் தற்போதுள்ள இடத்தில் இருந்து அவனது வீடு எத்திசையில் உள்ளது. நிமலன் தற்போதுள்ள இடத்திற்கும் அவனது வீட்டிற்கும் இடைப்பட்ட குறுகிய தூரம் யாது?

b. i. தரப்பட்ட தள உருக்கள் A, B, C, D இன் பெயர்களை எழுதுக.




ii.




உருவிலுள்ள கோணங்கள் யாவும் செங்கோணங்கள் ஆகும். இதன் சுற்றளவு யாது?

***